## தமிழ்நாடுதகவல்ஆணையம்

எண்.19, அரசுபண்ணைகிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டைமெட்ரோரயில்நிலையம்அருகில்), தொலைபேசி: 044-29515590

<u>ஆணைநாள் 01.07.2026</u>

<u>முன்னிலை</u>
திரு அ. விஜயராம், எம்.ஏ., பி.எல்.,
மாநிலதகவல்ஆணையர்

*****

<u>வழக்குஎண். SA 10620/H/2024</u>

ஆ. கதிவரன் — மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
நகர திட்டமிடுநர், — பொது அதிகார அமைப்பு
சிவகாசி மாநகராட்சி,
சிவகாசி - 626 123.
விருதுநகர் மாவட்டம்

<u>கோரியதகவல்:</u> மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு A6(1)-ன் கீழ் 20.05.2024 அன்று தாக்கல் செய்துள்ள மனுவில் சிவகாசி மாநகராட்சி அலுவலகத்தில் கட்டிட உரிமையாளர்களுக்கு அனுமதி பெறப்பட்ட விபரங்கள் சமர்ப்பிக்க அறிவிப்பு அனுப்பப்பட்ட விவரத்தையும், அதன் நகல்களையும் மற்றும் ஏனைய இரண்டு இனங்கள் சம்மந்தமாக தகவல்கள் வேண்டி மனு தாக்கல் செய்துள்ளார். பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் தனக்கு திருப்தியளிக்கவில்லை எனத் தெரிவித்து மேல்முறையீட்டாளரால் 13.08.2024 அன்று தாக்கல் செய்யப்பட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவானது இன்று (01.07.2026) இவ்வாணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மேல்முறையீட்டாளர் | திரு. ஆ. கதிரவன் இன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை. (தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு நடைமுறை) விதிகள், 2012 விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது). |
| பொதுத்தகவல் அலுவலர் | பொதுத்தகவல் அலுவலர் திரு ரா. சரத்குமார், உதவிப்பொறியாளர் (திட்டம்), சிவகாசி மாநகராட்சி அவர்கள் ஒப்புதல் கடிதம் மூலம் விசாரணைக்கு நேரில் ஆஜரானார். |

## ஆணை

இன்றைய (01.07.2026) விசாரணையின்போது ஆஜரான பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் மேல்முறையீட்டாளர் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு 19.06.2024 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல்கள் வழங்கியுள்ளதாகத் தெரிவித்து அதற்கான ஆவண நகலினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர் இன்றைய விசாரணைக்கு ஆஜராகி தன்னுடைய கருத்தை எடுத்துரைக்க தவறிவிட்டார்.

2. இன்றைய விசாரணையின் முடிவில் கீழ்கண்டவாறு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

- இன்றைய விசாரணையின்போது மேல்முறையீட்டாளர் ஆஜராகாத நிலையில், ஆவணங்கள் பரிசீலனை செயயப்பட்டதில் பொதுத் தகவல் அலுவலரால் போதுமான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் பதிவு செய்து இவ்வழக்கு முற்றாக்கம் செய்யப்படுகிறது.

ஒம்/- (அ. விஜயராம்)
மாநில தகவல் ஆணையர்

//ஆணையத்தின் ஆணைப்படி//

உதவிப் பதிவாளர்

வழக்குஎண். SA 10620/H/2024
பெறுநர்
பொதுஅதிகாரஅமைப்பு

பொதுத் தகவல் அலுவலர்/
நகர திட்டமிடுநர்,
சிவகாசி மாநகராட்சி,
சிவகாசி - 626 123.

மேல்முறையீட்டாளர்

திரு ஆ. கதிரவன்,
எண்.4, பெத்தணன் சந்து,
திருத்தங்கள் - 626 130.

Copy to : File
MB/PS